# ALL YOU NEED TO KNOW ABOUT CRIB

# CRIB தொடர்பாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தும்

## கடன் தகவல் பணியகம்

**வாடிக்கையாளர் இரகசியத்தன்மை, கடன் குறிப்பு முகவர் நிலையங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு**

ஒரு பொறுப்பான நிதிச் சேவை வழங்குநர் மற்றும் ஒரு நல்ல நிறுவன பிரஜை என்ற வகையில், வாடிக்கையாளர்கள்- கடன் பெறுனர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் பற்றி கற்பிப்பதை எங்கள் கடமை மற்றும் பொறுப்பு என நாங்கள் கருதுகிறோம்.அதே வேளையில், நிலுவைத் தொகையை வசூலிப்பதிலும் மீட்டெடுப்பதிலும் சட்டத்திற்கு உட்பட்டு நாங்கள் பின்பற்றும் வரையறுக்கப்பட்ட நடைமுறையைப் பற்றி வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிப்பதும் எங்களது பொறுப்பாகும்.

நாங்கள் வீட்டுக்கடன், தனிநபர் கடன், கடன் அட்டைகள் (Credit Cards), பிணையுள்ள அல்லது பிணையற்ற மேலதிக பற்று (Overdrafts) மற்றும் கடன்கள், வாடகை கொள்முதல் / குத்தகை ஒப்பந்தங்கள் (Hire Purchase/Lease) போன்ற முறைகளில் கடன் வழங்குகிறோம். இவை தொகை, கால அளவு மற்றும் திருப்பிச் செலுத்தும் இடைவெளி ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்ட திருப்பிச் செலுத்தும் நியதிக்கு உட்பட்டவை.

இருப்பினும், வாடிக்கையாளர்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட அந்த நியதி அட்டவணையைப் பின்பற்றத் தவறினால், நிலுவைத் தொகையை மீட்டெடுக்க ஒரு வரையறுக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்படுகிறது. இந்த நடைமுறையில் தொலைபேசி அழைப்புகள் மூலம் நினைவூட்டல், கடிதங்கள் மற்றும் அறிவிப்புகளை அனுப்புதல், நேரில் சந்தித்தல், பொருந்தக்கூடிய இடங்களில் பிணையப் பொருட்களை (Security) மீண்டும் கையகப்படுத்துதல் மற்றும் சட்ட நடவடிக்கை ஆகியவை அடங்கும். மேலும், வாடிக்கையாளர்களின் நிலுவையில் உள்ள கடன்கள் குறித்த தகவல்களைக் கடன் தகவல் பணியகத்திற்கு (CRIB) தெரிவிப்பது எங்களது கட்டாயக் கடமையாகும்.

## **கடன் தகவல் பணியகம் என்றால் என்ன**?

கடன் தகவல் பணியகம் (CRIB) என்பது கடன் பெறுபவர்களின் கடன் தகவல்கள் மற்றும் கடன் வரலாறு ஆகியவற்றைப் பராமரிக்கும் ஒரு சுதந்திரமான களஞ்சியமாகும்.அனைத்து அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களும், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் அவர்கள் அக் கடன்களை எவ்வாறு திருப்பிச் செலுத்துகிறார்கள் என்பது குறித்த உண்மையான தகவல்களை இந்தப் பணியகத்திற்கு வழங்குவது கட்டாயமாகும். அனைத்து அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களாலும் வழங்கப்படும் இத்தகவல்களை இப்பணியகம் தனது தரவுத்தளத்தில் (Database) ஒருங்கிணைக்கிறது. இதற்குப் பதிலாக, நிதி நிறுவனங்கள் தங்களிடம் கடன் பெற விரும்பும் வாடிக்கையாளர்களின் கடன் அறிக்கைகள் மற்றும் கடன் வரலாற்றை இதிலிருந்து பார்வையிட முடியும்.

## **கடன் அறிக்கை மற்றும் வரலாறு**

இந்தக் கடன் அறிக்கையானது தனிநபர்கள் மற்றும்/அல்லது சட்ட நிறுவனங்களின் பல்வேறு நிதிப் பொறுப்புகள் குறித்த தகவல்களையும், அந்த நிதிப் பொறுப்புகளை அவர்கள் நிறைவேற்றும் விதம் மற்றும் வரலாறு குறித்த தகவல்களையும் கொண்டுள்ளது.

வங்கிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் ஒரு கடன் விண்ணப்பம், கடன் அட்டை

(Credit Card) அல்லது பிணையாளர் (Guarantor) ஒருவரை ஏற்றுக்கொள்வது போன்றவற்றைச்செயல்படுத்துவதற்கு இத்தகவல்களை பயன்படுத்துகின்றன.கடன் அறிக்கையானது ஒவ்வொரு மாதமும் இற்றைப் படுத்தப்படுவதால் (Updated), வாடிக்கையாளர்கள் தங்கள் தகவல்களின் துல்லியத்தை அவ்வப்போது சரிபார்ப்பது அவசியமாகும்.
நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் அனைத்து கடன்கள் பற்றிய தகவல்களையும் கடன் தகவல் பணியகத்திற்கு (CRIB) அறிக்கையிடுவதும், அவர்களின் கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலையை (Repayment Status) இற்றைப்படுத்துவதும் கட்டாயமாகும். கடன் அறிக்கைகள் நிதி நிறுவனங்கள் சிறந்த கடன் முடிவுகளை விரைவாகவும், பாரபட்சமின்றியும் (Objectively) எடுக்க உதவுகின்றன.

நீங்கள் ஒரு நிறுவனத்திடம் 'கடன்' (Credit) கோரி விண்ணப்பிக்கும் போது, கடன் வழங்குபவர்கள் கருத்தில் கொள்ளும் மிக முக்கியமான காரணி அநேகமாக உங்கள் 'கடன் வரலாறு' (Credit History) ஆகும். ஒரு தனிநபர் 'கடன் பெறும் தகுதியை' (Credit worthiness) வெளிப்படுத்துவதற்கு, ஒரு நல்ல கடன் பதிவை உருவாக்குவது மிக முக்கியமான படியாகும்.
ஒரு நல்ல கடன் வரலாற்றை உருவாக்க நீங்கள் பின்வரும் சில அடிப்படை வழிமுறைகளை பின்பற்றலாம்:

■ உங்கள் வருமானத்திலிருந்து உங்களால் எவ்வளவு திருப்பிச் செலுத்த முடியுமோ, அவ்வளவை மட்டும் கடனாகப் பெறுங்கள்.

■ உங்கள் நிதிப் பொறுப்புகளை (Financial commitments) சரியான நேரத்தில் நிறைவேற்றுங்கள்.

■ ஏதேனும் ஒரு காரணத்தினால் உங்களால் உங்கள் நிதிப் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாவிட்டால், கடன் வழங்கியவருடன் (Lender) பேச்சுவார்த்தை நடத்தி, உங்கள் கடன் திருப்பிச் செலுத்தும் முறையை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள் (Reschedule).

■ குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது உங்கள் கடன் அறிக்கையை சரிபார்க்கவும்.

■ கடன் அறிக்கையில் முரண்பாடுகள் இருப்பின், உங்கள் வங்கி அல்லது CRIB க்கு அறிவித்து உடனடியாக அதை சரிசெய்யவும் .

## CRIB **மூலம் ஒரு தனிநபர் எவ்வாறு பயனடையலாம்**

ஒரு தனிநபர் தனது கடன்களைச் சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்தி, ஒரு நல்ல கடன் வரலாற்றைப் (Track record) பராமரித்து வந்தால், அவரால் மிக விரைவாகக் கடனைப் பெற முடியும். மேலும், உங்களிடம் மிகச்சிறந்த கடன் வரலாறு இருந்தால், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுடன் பேசி சாதகமான நிபந்தனைகளைப் (Better terms) பெற முடியும். ஏனெனில், தற்போதைய கடுமையான போட்டி நிறைந்த மற்றும் சிக்கலான சந்தையில், ஒவ்வொரு நிறுவனமும் நல்ல வாடிக்கையாளர்களையே தேடுகின்றன. உங்கள் திருப்பிச் செலுத்தும் திறனுக்கு ஏற்ப நீங்கள் கடன் வாங்கினால், உங்களால் ஒரு சிறந்த கடன் வரலாற்றையும் (Track record) நேர்மையையும் (Integrity) பராமரிக்க முடியும்.

## நிதிசார் குறைதீர் அதிகாரியின் பங்கு

"நிதிசார் குறைதீர் அதிகாரி" (Financial Ombudsman) என்பவர் வங்கி மற்றும் நிதிச்சேவைகளில் அனுபவம் வாய்ந்த ஒரு நபர் ஆவார். தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கும், குறைதீர் திட்டத்தின் (Ombudsman scheme) கீழ் வரும் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கும் இடையே ஏற்படும் பிணக்குகளை விசாரித்துத் தீர்த்து வைக்க நிதிசார் குறைதீர் அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நிதிசார் குறைதீர் அதிகாரியின் அலுவலகம் அமைந்துள்ள இடம்:

இல 143 A , வஜிர வீதி, கொழும்பு 05

தொலைபேசி: +94 112 595625

தொலைநகல்: +94 112 595624

இணையத்தளம்: www.financialombudsman.lk